

தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி கழக வேட்பாளர் – முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் அவர்கள் போடி தேர்தல் நடத்தும் அதிகாரி நல்லையாவிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.




தென்காசி தெற்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தென்காசி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் குற்றாலம் இலஞ்சி டிரெஸ்ஸில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பங்கேற்று கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் கலை கதிரவனை ஆதரித்து அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறசெய்ய வேண்டும் என்பது தொடர்பான பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன், மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம், முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் பொ.சிவபத்மநாதன், மா.செல்லதுரை, மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி., பழனி நாடார் எம்.எல்.ஏ. உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஒத்தக்கடையிலிருந்து பல்லாயிரக்கணக்கானோருடன் ஊர்வலமாகப் புறப்பட்டு சென்று நரசிங்கத்தில் அமைந்துள்ள கிழக்கு தாலுகா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் கருணாகரனிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முத்தரசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி, மேற்கு ஒன்றிய முன்னாள் சேர்மன் வீரராகவன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் அரச முத்துப்பாண்டி உள்ளிட்டோர் உள்ளனர்.

### தமிழ்நாடு, புதுச்சேரியில்

# பா.ஜ.க.வின் சித்து விளையாட்டுக்கள் எடுபடாது!

## புதுச்சேரியில் தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டி!

புதுச்சேரி, ஏப். 7-

“தமிழ்நாடு, புதுச்சேரியில் பா.ஜ.க.வின் சித்து விளையாட்டுகள் எடுபடாது” என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கூறியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்பி புதுச்சேரியில் விசிக, திமுக வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டார். முன்னதாக அவர் அளித்த பேட்டி வருமாறு:-



தேர்தலுக்கு முன்பு தொகுதி பங்கீடு குறித்து பேச கால அவகாசம் இல்லாததால், 4 தொகுதிகளில் போட்டியிட மனு தாக்கல் செய்தோம். காங்கிரஸ் பொதுச்செயலாளர் முகுல் வாஸ்னிக் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்களுடன் ஏற்பட்ட உடன்பாடு காரணமாக 3 தொகுதிகளில் போட்டி இல்லை. உழவர்கரை தொகுதியில் மட்டும் போட்டியிடுகிறோம்.

மற்ற தொகுதிகளில் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு பணியாற்றுவோம். தமிழக முதல்வரின் பல்வேறு திட்டங்கள் மக்களிடம் வரவேற்பு பெற்றுள்ளது. தேர்தல் வாக்குறுதியாக குடும்பத்துக்கு ரூ. 8 ஆயிரம் கூப்பன் வழங்குவதாக அறிவித்துள்ளது வெற்றிக்கு கை கொடுக்கும். தமிழகத்தில் மதவாத சக்திகளுக்கு இடம் தருவதில்லை என மக்கள் உறுதியுடன் உள்ளனர். இதை எதிரொலிக்கும் வகையில் புதுச்சேரியிலும் மதச்சார்பற்ற கூட்டணி மாபெரும் வெற்றி பெறும்.

**புதுச்சேரி மக்கள் எச்சரிக்கையாக இருந்திடுவீர்!**

பாஜ தேர்தல் அறிக்கையில் புதுச்சேரியின் லச்சினையை மாற்றப்போவதாக கூறியுள்ளது. இது புதுச்சேரியின் சகோதரத்துவத்தை சீர்குலைக்கும் முயற்சியாகும். புதுச்சேரி மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போதே பாஜ, ஆர்எஸ்எஸ் அமைப்புகள் நடத்தும் கூட்டத்தில் தமிழக ஆளுநர் ராசேந்திர அர்லேகர் பங்கேற்றுள்ளார். இது நடத்தை விதிகளுக்கு முரணானது.

**கலைஞர் குறித்து எடப்பாடியின் பேச்சு அநாகரீகம்!**

இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி, இந்திய தலைமை தேர்தல் ஆணையரிடம் கூட்டணி கட்சிகள் சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் மீது நடவடிக்கை எடுத்து அவர் வகிக்கும் பொறுப்பிலிருந்து மாற்ற வேண்டும். எடப்பாடி பழனிசாமி மறைந்த தலைவர் கலைஞர் குறித்து பேசியது அறம் வாய்ந்த செயல் அல்ல. மறைந்த தலைவர்கள் குறித்து பேசுவது அநாகரீகம். பாஜவின் சித்து வேலைகள் தமிழகம், புதுச்சேரி தேர்தலில் எடுபடாது. தமிழகம், புதுச்சேரியில் மதச்சார்பு அரசியலுக்கு இடமில்லை. இதை வரும் தேர்தலில் மக்கள் உறுதிபடுத்துவார்கள்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டியளித்தார்.

### ஜெயிலுக்குப் போக இருந்த

# பழனிசாமியை காப்பாற்றியது யார் தெரியுமா?

## முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். கேள்வி!

தேனி, ஏப். 7-

“ஜெயிலுக்குப் போக இருந்த எடப்பாடி பழனி சாமியை காப்பாற்றியது யார் தெரியுமா?” என்று ஓ.பன்னீர் செல்வம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேனி மாவட்டம், போடியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. அதில் போடி தொகுதி தி.மு.க. வேட்பாளரான ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:-

இன்றைய அரசியல் சூழலில் தி.மு.க.வில் நான் இணைந்ததை அனைவரும் வரவேற்கின்றனர். அதற்கு காரணம் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய முப்பெரும் தலைவர்களின் அன்பு, அறிவு, ஆற்றல் ஆகிய குணங்களைப் பெற்று அனைவரையும் அரவணைக்கும் பக்குவமிக்க ஒரே தலைவர் ஸ்டாலின் மட்டுமே என்பதால்தான்.



அவரது தலைமையில் செயல்படும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் உள்ள கட்சிகளில் இது வரை யாரும் வெளியேறினார்கள் என்ற நிலை இல்லை. ஆனால் எடப்பாடி பழனிசாமியோ, தனக்குத் தானே கட்சியின் பொதுச்செயலாளர் மற்றும் கூட்டணியின் தலைவர் என்று உருவாக்கிக் கொண்டு கூறி வருகிறார்.

தேர்தல்பிரச்சாரத்தில் எடப்பாடி பழனிசாமி அரசியல் நாகரீகம் இல்லாத தலைவராக உள்ளார். அவருக்கு படுதோல்வி உறுதி. ஒரு சீட் கூட வெற்றி பெற முடியாத சூழ்நிலை உருவாக்கியுள்ளது. அதனால் ஈ.பி.எஸ். மூளை அவுட் ஆகிவிட்டது.

**பழனிசாமிக்கு என்ன தகுதி இருக்கிறது?**

கலைஞரைப் பற்றி பேச ஈபிஎஸ்க்கு தகுதியில்லை. அண்ணாவின் தம்பியாக, பெரியாரின் சிஷ்யனாக எவ்வளவோ சோதனைகளை தாண்டி தமிழக மக்களுக்கு சமூக நீதியைப் பெற்றுக் கொடுத்தவர் கலைஞர். அத்தகைய தலைவர் குறித்து பேச எடப்பாடி பழனிசாமிக்கு என்ன தகுதி இருக்கிறது? இன்றைய அரசியலில் அ.தி.மு.க.வைப் பற்றியோ அல்லது அதன் தலைவர்கள் குறித்தோ யாரும் பேசுவதில்லை.

அதே நேரத்தில் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் ஸ்டாலின் குறித்து மட்டுமே அனைவரும் பேசுகின்றனர் அதற்கு காரணம், ஐந்தாண்டுகளில் அவர் செய்த மக்கள் நலத்திட்டங்கள்தான். தற்போது எடப்பாடி பழனிசாமி என்னை துரோகி என்கிறார். பல்வேறு சோதனைகளுக்கு நான் உள்ளாக்கப்பட்டேன். துரோகம் யார் செய்தது? அவர்தான் செய்திருக்கிறார். தற்போது கூட்டங்களில் அவர் கத்துவதற்கு தவறவில்லை. ஏன் கத்துகிறார்?.

அவர் கத்துவதில் அர்த்தம் இல்லை. வரும் தேர்தலில் எடப்பாடி பழனிசாமிக்கு ஒரு சீட் கூட கிடைக்காத சூழ்நிலை உருவாகியுள்ளது. அவருக்கு மூளை அவுட்டாகி விட்டது. அவுட்டானால் அமைதியாக இருக்க வேண்டும். கலைஞர், ஸ்டாலின் குறித்து பேச தகுதி இருக்கா உனக்கு? யாரால் நீ அரசியலுக்கு வந்தாய், யாரால் பதவி பெற்றாய்? எந்த அரசியல் வரலாறும் இல்லை. அவர் ஜெயிலுக்குப் போக இருந்ததை காப்பாற்றியது யார் தெரியுமா? செல்வகணபதி, முத்துசாமி ஆகியோர் தான் காப்பாற்றினர்.

இவ்வாறு ஓ.பன்னீர் செல்வம் பேசினார்.

### சாதியையும், குடும்பத்தையும் வைத்து

# எடப்பாடி, அன்புமணி கீழ்த்தரமாக அரசியல் செய்வதா?

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கடும் எச்சரிக்கை!

திருவண்ணாமலை, ஏப். 7–

”சாதியையும் குடும்பத்தையும் வைத்து எடப்பாடி, அன்புமணி ஆகியோர் கீழ்த்தரமாக அரசியல் செய்வதா? என்று தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தி.மு.க. மற்றும் தே.மு.தி.க. வேட்பாளர்களை ஆதரித்து தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிரச்சாரம் செய்தார்.

அப்போது, அவர் அளித்த பேட்டி வருமாறு: –

விருத்தாச்சலம் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்கிறேன். தொடர்ந்து அங்கு இரண்டு நாட்கள் பிரச்சாரம் செய்ய திட்டமிட்டு இருக்கிறேன். அதை தொடர்ந்து, வழக்கம் போல என்னுடைய பிரச்சார பயணம் தொடரும். தி.மு.க. கூட்டணி 200 தொகுதிகளில் நிச்சயம் வெற்றி பெறும். மீண்டும் மு.க.ஸ்டாலின் முதல்வராக பதவி ஏற்பது உறுதி. அண்ணாமலையார் கோயிலில் இருந்து சொல்கிறேன் எங்கள் கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.



முன்னாள் முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கண்ணியமான வார்த்தைகளை பேச வேண்டும். மற்றவர்கள் மதிக்கக் கூடிய வகையில் அவரது பேச்சு இருக்க வேண்டும். மூன்றாம் தர, நான்காம் தர பேச்சாளர்களைப் போல பேசுவது கண்டிக்கத்தக்கது. மே 4ம் தேதி தேர்தல் முடிவுகள் வரும் போது இப்படி பேசுவதற்கான பலனை நிச்சயம் எடப்பாடி அடைவார்.

**பழனிசாமிக்கு ஏன் வயிறு எரிகிறது?**

முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றிய சாதனைகளையும், திட்டங்களையும், தொகுதிக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதையும் சொல்லி நாங்கள் ஓட்டு கேட்கிறோம். அரை சதவீத ஓட்டு என எடப்பாடி பேசுகிறார். அவருக்கு ஏன் வயிறு எரிகிறது. வயிற்றெரிச்சலில் கருகுவது எங்களுக்கு தெரிகிறது. அ.தி.மு.க. என்.டி.ஏ. கூட்டணியில் தானே 2011 முதல் 2026 வரை இருந்தோம். அவர்களுடன் இருக்கும் போதெல்லாம் எங்கள் அருமை அவர்களுக்கு தெரியவில்லை.

**நம்பிக்கைத் துரோகம் செய்தவர்!**

மரியாதை காரணமாக, கண்ணியத்தின் காரணமாக நான் இதுவரை காண்பிக்காத ஆவணத்தை இந்த கோயிலில் இருந்து தெரிவிக்கிறேன். எங்களுக்கு ராஜ்யசபா சீட்டு தருவதாக எடப்பாடி பழனிசாமி கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார். 5 எம்.பி., ஒரு ராஜ்யசபா என இரு தரப்பிலும் கையெழுத்துப் போட்ட ஆதாரம் இதோ என்னிடம் இருக்கிறது. கடந்த 2024 தேர்தலில் அவர் கையெழுத்து போட்டு கொடுத்தார். ஆனால், நான் கையெழுத்து போட்டுக் கொடுக்கவில்லை என்று இப்போது பேசுகிறார். 2025ல் அவர் ராஜ்யசபா கொடுக்கவில்லை. கையெழுத்து போட்ட படிவத்தில் எந்த ஆண்டு என குறிப்பிட வில்லையே என கேட்டதற்கு, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா காலத்திலிருந்து இந்த நடைமுறைதான் உள்ளது என்றார். என் வார்த்தை முக்கியம் அதை நம்புங்கள் என்று சொன்னார்.

நம்பிக்கைக்கு புறம்பாக பேசுகிறார். நம்பிக்கை துரோகம் செய்திருக்கிறார். எங்களுக்கும் கீழ்த்தரமாக பேசத் தெரியும். ஆனால், அரசியலில் நாங்கள் மரியாதையாக நடந்து கொண்டிருக்கிறோம். அண்ணா வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என நடந்து கொண்டிருக்கிறோம். கேப்டன் எங்களை அப்படித் தான் வழி நடத்தி இருக்கிறார். ஐ.சி.யு.வில் இருந்த கட்சி என்கிறார். அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்களும் கடைகோடி தொண்டர்களும் எடப்பாடி பேசுவதை ஏற்கவில்லை. எடப்பாடி தவறு செய்து விட்டார் என அ.தி.மு.க.வினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

வரும் மே 4ம் தேதி ரிசல்ட் வரும் போது ஐ.சி.யுக்கு எடப்பாடி பழனிசாமி போகாமல் இருக்க வேண்டும். அன்புமணி தவறாக பிரச்சாரம் செய்கிறார். சாதியையும் குடும்பத்தையும் இழுக்கிறார். எடப்பாடியும், அன்புமணியும் இதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். கீழ்த்தரமான அரசியல் செய்வதை இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இதே போக்கு தொடர்ந்தால் எங்கள் தரப்பில் இருந்தும் கடும் விமர்சனம் உறுதியாக வரும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருவாடனை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ராம கருமாணிக்கம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர், இராமநாதபுரம் சட்டமன்ற வேட்பாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ரகு பாலாஜி மதுரை மேற்கு தாலுகா அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் நல்லமணி, மணிகண்டன், பைகரா கணேசன், பகுதிச் செயலாளர் காவேரி உள்ளிட்டோர் உள்ளனர்.